# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

## SC. No.328/2024

## Deposition of witness : LW8/PW-5

| Name : | திரு. லாசர் கென்னடி | Caste | - |
|---|---|---|---|
| S/o. | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk : | | Age : | |

Solemnly affirmed on 19.08.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

எதிரி ஆஜர்.

( சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்).

**முதல் விசாரணை** :

1. நான் மல்லியகரை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று, தற்பொழுது சேலத்தில் வசித்து வருகிறேன். கடந்த 23/7/2024 ஆம் தேதியன்று ஆத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசன் தகவலைப்பெற்று தலைமை காவலர் திரு சிவகுரு 593 என்பவரை ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி புகார் தாரரிடம் இருந்து புகார் வாக்குமூலம் பெற்று வரச் சொல்லி அனுப்பினேன். அவர் புகார் இடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் திரும்பினார் அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் மல்லிகை கரை காவல் நிலைய குற்ற எண் 86/2024 சட்டப்பிரிவுகள் 296B, 115 (2), 351(2) பிஎன்எஸ் r/w. 92B ரைட் ஆஃப் பர்சன்ஸ் வித் டிசபிலிட்டிஸ் ஆக்ட் ஆகிய பிரிவின் கீழ் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

2. கடந்த 23.07.2024 ஆம் தேதியன்று இரவு 19.00 மணிக்கு நான் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கலையரசன் மற்றும் கலைச்செல்வன் ஆகிய இருவரின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். சாட்சிகள் செவ்வந்தன், ராமசாமி, கலைச்செல்வன் மற்றும் கலையரசன் ஆகியோர்களை விசாரணை செய்து, அவர்களது வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால், எதிரியை தேடி வந்த நிலையில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் **25.07.2024** ஆம் தேதி அன்று காலை 11.00 மணிக்கு ராஜா பாளையம் பஸ் நிறுத்தம் அருகில் அவரை கைது செய்து, கைதுக்கான காரணம் சொல்லி நிலையம் கொண்டுவந்து அவரை திரேகப் பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்புவித்தேன். அதே நாளில் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

3. பின்னர், 31.07.2024 ஆம் தேதியன்று வாதி வாதியின் காய சான்றிதழ் பெற வேண்டி மருத்துவர் கிருபா ஷங்கர் அவர்களிடம் சென்று, அவரது காயம் சொற்ப காயம் என அவர் அளித்த கருத்துரையை பெற்ற நிலையம் வந்து அவரது வாக்கும் பதிவு செய்தேன். தலைமைக் காவலர் 593 திரு. சிவகுரு என்பவரை விசாரணை செய்து அவர்கள் வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிக்கு எதிராக 31.07.2024 ஆம் தேதியன்று சட்டப்பிரிவு 296 பி 115(2) ,351 ( 2) BNS மற்றும் 92 ரைட் ஆஃப் பர்சன்ஸ் வித் டிசபிலிட்டிஸ் ஆக்ட் 2016 ஆகிய பிரிவுகளின் கீழ் நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். நான் தயார் செய்த **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5** ஆகவும், **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.6** ஆகவும், **மாற்றுத்திறனாளி என்பது தொடர்பாக புகார்தாரர் கொடுத்த அடையாள அட்டையின் நகல் அ.த.சா.ஆ. 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**நீதிமன்ற கேள்வி :**

4. சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சொல்லும் குச்சியை நான் இந்த வழக்கில் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அந்த குச்சி என்ன ஆனது என்பது குறித்து நான் விசாரணை மேற்கொண்டேனா என்றால், குச்சியை எதிரி சுக்கு நூறாக உடைத்து தூக்கி எறிந்து விட்டதாக தெரிவித்தார்கள். அது என்ன குச்சி என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால், அது வேப்பங்குச்சி. பெட்ரோல் பங்க் ராசிபுரம் ஆத்தூர் மெயின் ரோட்டில் இருந்து சற்று தொலைவில் இடது புறம் உள்ளடக்கி உள்ளது என்பதால் மெயின் ரோட்டில் பெட்ரோல் பங்க் கிடையாது. சம்பவ இடத்திற்கு பக்கத்தில் கிழங்கு மேல் எதுவும் கிடையாது. அந்த இடத்தின் பெயர் கிழங்கு மில் அவ்வளவுதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

5. இந்த வழக்கில் காயமடைந்த நபர் மாற்றுத்திறனாளி என்பது குறித்து எந்த விதமான ஆவணமும் வாங்கி வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகார்தாரரை அதற்கு பிறகு நான் விசாரணை செய்த பொழுது அவர் மாற்றுத்திறனாளிக்கான அடையாள அட்டை கொடுத்தார் அந்த அடையாள அட்டை அவரிடம் இருந்து பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தம்பி (எ) ராமசாமியை நான் விசாரணை செய்து அவரது வாக்குமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால், அவரது வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். அவர் வயதானவர் அவர் இந்த சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாவார்.

6. பெட்ரோல் பங்கை வேண்டுமென்று மாதிரி வரைபடத்தில் காட்டாத காரணத்தினால் தற்பொழுது அதை மறைத்து மெயின் ரோட்டில் இருந்து உள்ளடங்கி இடதுபுறம் பெட்ரோல் பங்க் இருப்பதாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. சம்பவ இடத்திற்கு பக்கத்தில் கிழங்கு மில் அமைந்துள்ளது என்றும் அதையும் வேண்டும் என்றே வழக்கில் காட்டாமல் தற்போது கிழங்குமில்லே அங்கு கிடையாது என குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. அவை இரண்டும் சம்பவ இடத்தை உண்மையாக காண்பிக்க கூடிய ஆவணம் கிடையாது என்றால், சரியல்ல.

7. அன்றைய தினம் எதிரியின் தாயாரான சின்ன பொண்ணு என்பவரை புகார்தாரரும் அவரைச் சேர்ந்தவர்களும் தாக்கி காயம் ஏற்படுத்தினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. அவ்வாறு தாக்கப்பட்ட காயமடைந்த சின்ன பொண்ணு என்ற நபர் அதே தேதியில் விபத்து பதிவேடு எண் 3345 என்று வழக்கில் காயமடைந்ததாக அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால், அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து அவர் புகார் தெரிவித்தார் என்றும், அதை மறைத்து எதிரிக்கு ஆதரவாக அவர் கொடுத்த புகாரை மட்டும் வழக்காக பதிவு செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் புகார் உண்மையான சம்பவத்திற்கான புகார் கிடையாது என்றால், சரியல்ல. புகார்தாரருக்கு ஆதரவாக எதிரிக்கு எதிராக நான் பொய்யான வழக்கு தொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் சொன்ன மாதிரி, புகார்

பதிவு செய்யப்படவில்லை என்றும், புலன் விசாரணையும் நான் முறையாக மேற்கொள்ளவில்லை என்றால், சரியல்ல. நான் புகாரில் தெரிவித்து இருப்பது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல சாட்சிகளின் பெயர்களையும் நான் முறையாக விசாரணை செய்து சேர்க்காமல் நானாக எனக்கு ஏற்றார் போல் சாட்சிகளை உருவாக்கி உள்ளேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னிலையில் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.08.19 18:45:23 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

சேலம்